# பொதுச் சொத்துக்களை விற்றவாறுதான் இந்த அரசாங்கம் புத்தாண்டு சுப நேரத்தில் கடமைகளைத் தொடங்கியுள்ளது!

## முன்னிலை சோஷலிசக் கட்சியின் புபுது ஜயகொட தெரிவிப்பு

அரச நிறுவனங்களை விற்பதற்கு அமைச்சரவை அனுமதியை எடுத்தவாறு தான் இந்த அரசாங்கம் புத்தாண்டு சுப நேரத்தில் கடமைகளை ஆரம்பிக்க தயாராகி வருகின்றது என முன்னிலை சோஷலிச கட்சியின் கல்வித்துறை செயலாளர் புபுது ஜயகொட ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவித்திருப்பதாவது – “புத்தாண்டு விடுமுறைக்கு முன்னதாக கடந்த அமைச்சரவை கூட்டத்தில் பல தீவிர அரசியல் முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. முதலாவது – இலங்கை மின்சார சபையை சில பகுதிகளாக பிரித்து வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விற்கும் புதிய மின்சார சட்டமூலத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இரண்டாவது – அரச வங்கிகளை தனியார் மயமாக்குவது, இதன் மூலம் முழு நிதி வளங்களையும் கொள்ளையிட தமது நண்பர்களுக்கு வழி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

2



மாலைக்கதிர்
Maalaikkathir
சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 03 செவ்வாய்க்கிழமை 16.04.2024 கதிர் 231




# பூபதியின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்தி வவுனியாவை வந்தடைந்தது

## மக்கள் அணிதிரண்டு அஞ்சலி



நாட்டுப்பற்றாளர் அன்னை பூபதியின் 36 ஆம் ஆண்டு நினைவேந்தல் அனுஷ்டிக்கப்பட்டு வரும் நிலையில் அவரின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்தி இன்று வவுனியாவை வந்தடைந்த நிலையில் பலரும் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.

தமிழ்த் தேசிய மக்கள் முண்ணனியின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்த அன்னை பூபதியின் திருவுருவப்படம் 2

# மொட்டு ஜனாதிபதி வேட்பாளரை என்னால் தேர்வு செய்ய முடியாது!

## முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ



அடுத்த ஜனாதிபதி வேட்பாளரை தன்னால் தெரிவு செய்ய முடியாது, என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஊடகமொன்றிற்கு தெரிவித்துள்ளார்.

இது மிகவும் பாரதுாரமான விடயம் எனவும், ஜனாதிபதி வேட்பாளராக பரிந்துரைக்கப்படும் 2

# ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி இலங்கைக்கு இம்மாதம் வருகிறார்



ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இம்மாதம் 24ஆம் திகதி இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

இம்மாதம் 24 ஆம் திகதி திறந்து வைக்கப்படவுள்ள உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தித் திட்டத்தில் கலந்து கொள்வதற்காகவே ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி, இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார், என நீர்ப்பாசன மற்றும் நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சர் ஷசீந்திர ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தித் திட்டம் ஈரானிய 2

# சுகாதார அதிகாரிகள் மீதான ஊழல் விசாரணைகள் மூடி மறைக்கப்படுமோ என்ற சந்தேகம் எழுந்துள்ளது!

## மருத்துவ நிபுணர் ஜி. ஜி. சமல் சஞ்சீவ தெரிவிப்பு

ஊழல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ள சுகாதார அதிகாரிகளின் உள்ளக விசாரணைகள் மூடி மறைக்கப்படுமோ என்ற சந்தேகம் எழுந்துள்ளதாகவும் இது தொடர்பாக ஆராய்ந்து பார்க்குமாறு மருத்துவ நிபுணர் ஜி. ஜி. சமல் சஞ்சீவ பொது நிர்வாக அமைச்சின் செயலாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.



கடந்த காலங்களில் சுகாதார அமைச்சின் மருந்து உபகரணங்கள் உட்பட கொள்முதல் நடவடிக்கைகளில் மோசடி மற்றும் ஊழல் நடந்துள்ளதாக கணக்காய்வு அறிக்கைகள் மூலமாகவும் மற்றும் கோப் குழு மூலமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. எனினும், அமைச்சின் உயர் அதிகாரிகள் தொடர்பான உள்ளக விசாரணைகள் மற்றும் அரச சேவைகள் 2

# இலங்கை மின்சார சபையின் 150 இற்கும் மேற்பட்ட மின் பொறியியலாளர்கள் வெளியேறியுள்ளனர்!

## பொருளாதார நெருக்கடியே காரணமாம்

இலங்கை மின்சார சபையின் 150 இற்கும் மேற்பட்ட மின் பொறியியலாளர்கள் நாட்டைவிட்டு வெளியேறியதன் காரணமாக எதிர்காலத்தில் நாடு முழுவதும் தொடர்ச்சியாக மின்சார விநியோகத்தில் கடும் நெருக்கடி நிலை ஏற்படலாம் என மின்சார சபையின் உள் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

2022ஆம் ஆண்டின் முதல் காலாண்டு தொடக்கம் தற்போது வரை மின்சார சபையில் கடமையாற்றிய மின் பொறியியலாளர்களில் 159 பேர் விடுமுறை அடிப்படையிலோ அல்லது சேவையிலிருந்து விலகியோ வெளிநாடுகளுக்கு சென்றுள்ளதாகவும், அதன்படி அவர்களில் 54 பேர் விடுமுறை அடிப்படையிலும், எஞ்சிய 105 பேர் முழுமையாக சேவையை விட்டு விலகியும் இவ்வாறு வெளிநாடு சென்றுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

மேலும், இம்மாதத்தின் ஆரம்ப தினங்களில் இன்னும் 13 மின் பொறியாளர்கள் பதவி விலகல் கடிதங்களை ஒப்படைத்துள்ள நிலையில், அடுத்த சில மாதங்களில் பணியில் இருந்து வெளியேறுவோரின் எண்ணிக்கை 200ஐ தாண்ட வாய்ப்புள்ளது எனவும் கூறப்படுகின்றது.

நாட்டின் பொருளாதார நிலை, வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, சம்பளம் மற்றும் இதர கொடுப்பனவுகளில் மட்டுப்படுத்தல், நிர்ணயிக்கப்பட்ட சம்பள அதிகரிப்புகள் கிடைக்காமை, அதிக வரிச்சுமை போன்றவற்றால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் காரணமாகவே மின் பொறியியலாளர்கள் இவ்வாறு நாட்டை விட்டு வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன் காரணமாக அனல்மின் நிலைய செயற்பாடுகள், பராமரிப்பு வேலைகள் 2

# ஜனாதிபதித் தேர்தலை புறக்கணிக்க முடியாது

## முன்னணிக்கு எதிராக ஸ்ரீநேசன் கருத்து

“எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் பற்றி தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளிடம் பலவிதமான கருத்துக்கள் பரவுகின்றன. அந்தவகையில் ஒரு சாரார் இந்தத் தேர்தலை நிராகரிக்க வேண்டும், வாக்களிப்பைப் புறக்கணிக்க வேண்டும் என்கின்ற கருத்துக்களைத் தமிழ் மக்கள் மத்தியில் பரப்பி வருகின்றனர். இந்தக் கருத்தை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.” – என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து ஸ்ரீநேசன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை மக்களுக்குத் தேர்தல் மூலமாக அவர்களது கருத்துக்களை, எண்ணங்களைச் சுதந்திரமாகத் தெரிவிப்பதற்கு வாய்ப்பளிக்கப்படுகின்றது. அந்தவகையில் தேர்தலைப் புறக்கணிப்பதால் என்ன விபரீதம் இடம்பெறும் என்பதையும் நாம் அறிந்துகொள்ள வேண்டும்.

இதற்கு உதாரணமாக 2005 ஆம் ஆண்டு 2

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

## பூபதியின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி மற்றும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஆகியோரின் தலைமையில் திறந்து வைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (04)

## பூபதியின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தாங்கிய ஊர்தி வடக்கு - கிழக்கின் அனைத்து மாவட்டங்களுக்கும் செல்லவுள்ள நிலையில் இன்று வவுனியாவை வந்தடைந்தது. வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் போராட்டப் பந்தலுக்கு முன்பாக அஞ்சலிக்காக ஊர்தி நிறுத்தப்பட்டதுடன், அதனைத் தொடர்ந்து பொங்குதமிழ் நினைவுத்தூபி, பண்டார வன்னியன் நினைவுச் சதுக்கம், கோவில்குளம், ஈச்சங்குளம், வவுனியா வடக்கு உள்ளிட்ட பல பகுதிகளில் சென்றதுடன், அஞ்சலி நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இதன்போது காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் சங்கத் தலைவி கா.ஜெயவனிதா ஈகைச்சுடரை ஏற்றி வைத்ததுடன், தாய்மாரால் மலர்மாலை அணிவித்ததையடுத்து மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது. இதில் பலரும் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர். (அ)

## பொதுச் சொத்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி மற்றும் மத்திய வங்கியினால் உருவாக்கப்பட்ட குழுவினால் தயாரிக்கப்பட்ட அரச வங்கிகளை சீர்குலைக்கும் முன்மொழிவுக்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது. அடுத்ததாக - இலவசக் கல்வி உரிமையை அழிக்கும் திட்டத்தின் முதற்கட்டமாக அரசாங்கத்திற்குச் சொந்தமான கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தில் பணம் செலுத்தி மருத்துவப் பட்டங்களை வழங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி இந்த கல்வி நிறுவனம் போலி மருத்துவப் பட்டங்களை விற்கும் கடையாக உருவாக்கப்பட்டிருப்பது தெளிவாகத் தெரிகின்றது.

ஆக, மக்களின் முக்கிய பொதுச் சொத்துக்களாகிய அரச வங்கி கட்டமைப்பு, மின்சாரம், கல்வி ஆகியனவற்றை கொள்ளையடித்தவாறு தான் அரசாங்கம் இந்த புத்தாண்டு சுப நேரத்தில் கடமைகளை தொடங்கியுள்ளது.

மக்கள் தமது சுப நேர கடமையாக இந்த சமூக விரோத நடவடிக்கைகளுக்கு எதிராக வீதியில் இறங்க வேண்டும். தேர்தல் நேரத்தில் பார்த்துக்கொள்கிறோம் என்று போர்த்திக்கொண்டு உறங்கினோமானால், பழைய வருடங்களை விட இந்த புத்தாண்டு மோசமாகத்தான் இருக்கும். புத்தாண்டை உண்மையிலேயே மகிழ்ச்சியாகக் கொண்டாட, மக்கள் தங்களை ஒரு பரந்த வெகுஜன இயக்கமாக ஒழுங்கமைத்து, அரசியல் களத்தைக் கைப்பற்ற வேண்டும்.

சமூகவிரோத நடவடிக்கைகளுக்கு நாடாளுமன்றம் அனுமதி அளிக்கும் விதமாக கையை உயர்த்தினால், அவற்றைத் தோற்கடித்து அமைச்சரவை முடிவுகளைச் செல்லாமலாக்கும் திறனை கொண்ட மக்கள் பலத்தை நாடாளுமன்றத்திற்கு வெளியே கட்டியெழுப்ப வேண்டும். எனவே, இந்த புத்தாண்டில் அரசியலை புதிய வழியில் அணுகுவோம்". (ரேசி-60)

## மொட்டு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நபரை தான் முன்மொழிந்தால், ஜனாதிபதி வேட்பாளராகும் விருப்பத்திலுள்ள ஏனையவர்கள் தம்மோடு அதிருப்தி அடையக்கூடும் எனவும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மத்திய குழுவே ஜனாதிபதி வேட்பாளரை தெரிவு செய்ய வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ரேசி-61)

## சுகாதார....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆணைக்குழுவிற்கு இவை தொடர்பாக அறிவிக்கப்படுதல் ஆகியன மந்த கதியிலேயே நடைபெறுவதாக மருத்துவ மற்றும் சிவில் உரிமைகள் தொடர்பான மருத்துவர்களின் தொழிற் சங்க ஒன்றியம் தெரிவித்துள்ளது.

எனவே, அவ்வாறான அதிகாரிகளை அப்பதவிகளில் இருந்து நீக்கி புதிய அதிகாரிகளை நியமிப்பதற்கு தற்போதைய சுகாதார நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், இது தொடர்பில் ஜனாதிபதியின் கவனத்தை ஈர்ப்பதற்கான பணிகளில் தாம் ஈடுபட்டு வருவதாகவும் மருத்துவ நிபுணர் சமல் சஞ்சீவ தெரிவித்துள்ளார். (ரேசி-62)

## ஜனாதிபதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ரணில் விக்கிரமசிங்கவும் மஹிந்த ராஜபக்ஷவும் போட்டியிட்டனர். அந்தவேளையில் ஒரு கருத்து உருவாக்கப்பட்டது, தமிழர்கள் இம்முறை தமது வாக்களிப்பைப் புறக்கணிக்க வேண்டும் எனச் சொல்லப்பட்டது. இதன் விளைவாக மிக மோசமான அடிப்படைவாத உணர்வுடைய மஹிந்த ராஜபக்ஷ வெற்றி பெற்றார். அவர் வெற்றி பெற்றதால் தமிழர்கள் மிக மோசமான துன்பங்களை அனுபவித்தார்கள்.

அடுத்ததாக, தமிழர்களும் தமிழ்த் தேசியக் கட்சிகளும் ஒரு பொதுவான முடிவுக்கு வர வேண்டும். ஜனாதிபதித் தேர்தலில் களம் இறங்கும், பிரதானமாகப் பேசப்படும் அநுரகுமார திஸாநாயக்க, சஜித் பிரேமதாஸ, ரணில் விக்கிரமசிங்க மூவரும் தமிழர்களுக்கு எதையும் வழங்கக்கூடிய எண்ணம் உடையவர்களாகக் காணப்படவில்லை.

கடந்த 75 ஆண்டுகளாக நாம் ஏமாற்றப்பட்டுள்ளோம். இன்று நாங்கள் சிங்கள வேட்பாளர்களை நம்ப முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். எனவே, நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதைத் தமிழ்த் தேசியக் கட்சிகள் பொதுவாகச் சிந்தித்து ஒரு முடிவை எடுக்க வேண்டும்."- என்றார். (அ)

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மற்றும் ஏனைய கடமைகளை உரிய முறையில் நிர்வகிப்பதற்கு இயலாத நிலை தோன்றுவதுடன் இது மக்களின் மின்சார தேவையை பூர்த்தி செய்வது தொடர்பில் எதிர்காலத்தில் நெருக்கடியை ஏற்படுத்தலாம் எனவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன. (ரேசி-63)

# காதலியையும் தாயையும் கூரிய ஆயுதத்தால் வெட்டிய இளைஞர் தூக்கிட்டு உயிர்மாய்ப்பு!

இளைஞர் ஒருவர் தனது காதலியையும், காதலியின் தாயையும் கூரிய ஆயுதத்தால் வெட்டிய பின்னர் தனது உயிரை மாய்த்துள்ளார்.

யாழ். இளவாலைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பனிப்புலம் பகுதியில் இன்று அதிகாலை இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

பனிப்புலம் பகுதியைச் சேர்ந்த 35 வயதான குணதிலகம் பிரணவன் எனும் இளைஞரும், அந்தப் பகுதியைச் சேர்ந்த யுவதியும் காதலித்து வந்துள்ளனர். இந்நிலையில், கடந்த சில நாட்களாகக் காதலர்களுக்கிடையில் முரண்பாடு ஏற்பட்ட நிலையில் இன்று அதிகாலை வேளை காதலியின் வீட்டுக்குச் சென்று மறைந்திருந்த இளைஞர், வீட்டார் காலை வீட்டின் கதவைத் திறந்த வேளை, நுழைந்து காதலியையும், அவரது தாயையும் கூரிய ஆயுதத்தால் வெட்டி விட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

சத்தம் கேட்டுக் கூடிய அயலவர்கள், பாரிய வெட்டுக் காயங்களுடன் காணப்பட்ட தாயையும் மகளையும் மீட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

இதையடுத்து வீட்டில் இருந்து சற்றுத் தொலைவில் இருந்த காணி ஒன்றில் மேற்படி இளைஞர் தனது உயிரை மாய்த்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் இளவாலைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# இலங்கைக்கு மட்டும் வெங்காயம்! இந்திய அரசின் முடிவில் மாற்றம்

பெரிய வெங்காய ஏற்றுமதிக்கு விதிக்கப்பட்டிருந்த தடையை இலங்கைக்கு மட்டும் நீக்க இந்தியா தீர்மானித்துள்ளது. இலங்கையில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது

இதன்படி 10,000 மெற்றிக் தொன் பெரிய வெங்காயத்தை இலங்கைக்கு ஏற்றுமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அண்டை நாடு என்ற அடிப்படையிலும், புத்தாண்டுப் பண்டிகைக் காலத்தைக் கருத்திற் கொண்டும் இந்தியா இந்த தீர்மானத்தை எடுத்ததாக கூறப்படுகிறது. (04)

# அதிவேக வீதிகளின் வருமானம் 80 மில்லியனால் அதிகரிப்பு!

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், இந்த வருட புத்தாண்டு காலத்தில் அதிவேக வீதிகளின் வருமானம் 80 மில்லியன் ஷரூபாவால் அதிகரித்துள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதன் பணிப்பாளர் நாயகம் பிரியந்த சூரியபண்டார இன்று ஊடகங்களுக்கு தவல் வழங்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த வருடம் ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரையான 6 நாட்களில் அதிவேக வீதிகளின் வருமானம் 235 மில்லியன் ஷரூபாவாக பதிவாகி உள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (04)

# நடைமேடையில் மோதுண்ட ரெயில் வண்டி

நேற்று சிலாபம் நோக்கி செல்லவிருந்த ரெயில் வண்டியொன்று கோட்டை புகையிரத நிலையத்தின் முதலாவது நடை மேடையின் முடிவு எல்லையின் மீது மோதி விபத்துக்குள்ளானது. இதனால் ரயிலின் முன்பகுதி மற்றும் நடைமேடையிலும் சேதம் ஏற்பட்டது. இந்த சம்பவம் குறித்து ரயில்வே துறை விசாரணை நடத்தி வருகிறது. (ரேசி-66)




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# கற்பிட்டி கால்பந்தாட்டத் தொடரின் சம்பியனானது யுனைட்டட் அணி



(கற்பிட்டி நிருபர் சியாஜ்)

கற்பிட்டி பேர்ல்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் நோன்புப் பெருநாளை முன்னிட்டு அணிக்கு 7 பேர் கொண்ட கற்பிட்டி கால்பந்தாட்ட லீக்- 2024 தொடர் கடந்த 13 ஆம் 14 ஆம் திகதிகளில் கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையின் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

கற்பிட்டி நகரில் உள்ள கால்பந்தாட்ட வீரர்கள் ஏலத்தின் அடிப்படையில் பேர்ல்ஸ், யுனைட்டட், ப்ளஸி கைஸ், வெஸ்ட் ட்ரைகர்ஸ், லேகர்ஸ் மற்றும் ஹைபர் வேல்ஸ் ஆகிய ஆறு அணிகளுக்கு தெரிவு செய்யப்பட்டனர்.

தொடரின் இறுதிப் போட்டிக்கு கற்பிட்டி பேர்ல்ஸ் அணியும் யுனைட்டட் அணியும் தகுதி பெற்றன.

மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற இறுதி ஆட்டத்தில் இரு அணிகளும் எவ்வித கோல்களையும் பெற்றுக் கொள்ளாமல் போட்டி சமநிலையில் முடிவுக்கு வந்தது.

இதனையடுத்து நடப்பாண்டின் சம்பியனைத் தீர்மானிக்க பெனால்டி உதை இரு அணிகளுக்கும் வழங்கப்பட்டது. இதில் யுனைட்டட் அணியின் கோல் காப்பாளர் பர்ஹான் எதிரணியின் இரு கோல்களை தடுத்ததன் காரணமாக யுனைட்டட் அணி 6-5 என்ற பெனால்டி கோல்கள் அடிப்படையில் சம்பியன் கிண்ணத்தை வெற்றி கொண்டது.

சம்பியனான யுனைட்டட் அணிக்கு வெற்றிக் கிண்ணத்துடன் 50,000 ஷரூபா பணமும் இரண்டாம் இடம் பிடித்த பேர்ல்ஸ் அணிக்கு கிண்ணமும் 25,000 ஷரூபா பணமும் வழங்கப்பட்டது. அத்துடன் தொடரின் சிறந்த கோல் காப்பாளராக யுனைட்டட் அணியின் பர்ஹான், சிறந்த வீரராக ஹைபர் வேல்ஸ் அணியின் அஹதீர், சிறந்த இளம் வீரராக பேர்ல்ஸ் அணியின் ஹிசாம் ஆகியோர் தெரிவானார்கள்.

அத்துடன் இத்தொடரில் அதிக கோல்கள் அடித்து இவ்வாண்டின் தங்கக் காலணி விருதை பேர்ல்ஸ் அணியின் ஜாஹித் தன்வசப்படுத்தினார்.

அத்தோடு இத்தொடரில் பங்குபற்றுவதற்காக கத்தார் நாட்டில் இருந்து விடுமுறை பெற்று வந்த நிலையில் கடந்த 8 ஆம் திகதி காலமான ஐயூப் நுஸ்கான் மற்றும் கடந்த 2022 ஆம் ஆண்டு நோன்புப் பெருநாள் தினத்தில் அகால மரணம் அடைந்த பேர்ல்ஸ் அணியின் வீரரும் முன்னாள் கற்பிட்டி பிரதேச சபையின் உறுப்பினருமான அக்மல் ஆகிய இருவரையும் கௌரவிக்கும் முகமாக நினைவுச் சீருடைகள் இருவரின் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டன.

சம்பியன் கிண்ணத்தைப் பெற்றுக்கொண்ட யுனைட்டட் அணியின் உரிமையாளர் ஹம்தூன் நஜாத், மரணமான வீரர் ஐயூப் நுஸ்கானுக்குச் சமர்ப்பணமாக அவரின் சகோதரர் ஐயூப் நுஸ்மிடம் கிண்ணத்தை கையளித்தமை குறிப்பிடத்தக்கது.

# காரைதீவில் கலாசார விளையாட்டு விழா!

(வி.ரி.சகாதேவராஜா)

காரைதீவு விளையாட்டுக் கழகத்தின் 41 வது வருட நிறைவை முன்னிட்டும், குரோதி புத்தாண்டு வருட பிறப்பை முன்னிட்டும் காரைதீவு விளையாட்டு கழகமும், விபுலானந்தா சனசமூக நிலையமும் இணைந்து நடத்தும் 26 வது மாபெரும் கலாச்சார விளையாட்டு விழா எதிர்வரும் 20ஆம் தேதி சனிக்கிழமை காரைதீவில் நடைபெற இருக்கிறது.

காரைதீவு விளையாட்டு கழகத் தலைவர் ரொட்டரியன் விஜயரெத்தினம் விஜயசாந்தன் தலைமையில் காரைதீவு விபுலானந்தா மைதானத்தில் நடைபெற இருக்கும் கலாசார விளையாட்டு விழாவில் பிரதம அதிதியாக, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் கணபதிப்பிள்ளை மகேசன் கலந்து சிறப்பிக்க இருக்கிறார்.

சீர்பெறு அதிதிகளாக கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் பதில் செயலாளரும் மட்டக்களப்பு மாநகர ஆணையாளருமான எந்திரி என் .சிவலிங்கம், அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன், கிழக்கு மாகாண விளையாட்டுத. திணைக்களப் பணிப்பாளர் யு. சிவராஜா ஆகியோரும் கலந்து சிறப்பிக்க இருக்கிறார்கள்.

முதன்மை அதிதியாக காரைதீவு பிரதேச செயலாளர் சிவ. ஜெகராஜன் மற்றும் ஏனைய



சிறப்பு நட்சத்திர கௌரவ அதிதிகள் பலரும் கலந்து சிறப்பிக்கின்றார்கள்.

இந்த நிகழ்விலே விசேடமாக காரைதீவு விளையாட்டு கழகத்தின் 40 வருடகால வரலாற்றை உள்ளடக்கிய "விபுலவிருட்சம்" என்ற சிறப்பு மலர் ஒன்றும் வெளியிட்டு வைக்கப்பட இருக்கின்றது. அத்துடன் கல்வித்துறை சாதனையாளர்களும் கௌரவிக்கப்பட இருக்கிறார்கள் என்று கழக செயலாளர் எஸ்.கிரிசாந்த் தெரிவித்தார்.



# காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தால் பண்டிகைக் காலத்தில் உணவகங்கள் திடீர் பரிசோதனை

(எம்.எம்.நம்ஸீன்)

காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் தஸ்லிமா பஷீரின் வழிகாட்டலின் கீழ் மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் மற்றும் பொது சுகாதார பரிசோதர்கள் ஆகியோரால், சித்திரைப் பண்டிகை காலத்தை முன்னிட்டு நேற்றும், நேற்று முன்தினமும் பல்வேறுபட்ட உணவுகள் கையாளும் நிறுவனாங்கள், மீன் விற்பனை நிலையங்கள், இறைச்சி விற்பனை நிலையங்கள், உணவுக் கண்காட்சிகள், மற்றும் சமய ஸ்தலங்கள் தொடர்பான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன்போது பொதுமக்களுக்கும், ஹோட்டல் உரிமையாளர்களுக்கும் உணவு மற்றும் நீரினால் பரவகூடிய நோய்கள் தொடர்பான விழிப்புணர்வும் வழங்கப்பட்டது.

## உல்லாசப் பிரயாணிகள் கயிறிழுத்தல் போட்டியில் பெண்கள் அணி வெற்றி!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

இலங்கையில்வரலாற்றில்என்றுமில்லாதவாறு வெளிநாட்டு உல்லாசப்பிரயாணிகளின் வருகை அதிகரித்துள்ள நிலையில், தமிழ் சிங்கள புதுவருடத்தையொட்டி அம்பலாங்கொட அகுறல சரீன் ஜயரெட்ண பௌண்டேசன் – விளையாட்டு விழா நிகழ்வின்றினை ஒழுங்கு செய்திருந்தது.

இதன்போது உல்லாசப்பிரயாணிகளிடையே ஒழுங்குசெய்யப்பட்டிருந்த கயிறிழுத்தல் போட்டியில் பெண்கள் அணியினர் வெற்றி பெற்றனர்.

இந்நிகழ்வைக் கண்டுகளிப்பதற்காக பெருந்திரளான மக்கள் குழுமியிருந்தனர்.



# ஆட்டிசம் குழந்தைகளும் உளச் சிகிச்சைகளும்

## அனைவரும் அறியவேண்டிய அவசியத் தகவல்கள்!

**திருமதி. வினோதர்ஷினி வினோகாந்த்**
உதவி விரிவுரையாளர்
உளவியல் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்



இன்றைய உலகில் பல மில்லியன் கணக்காண குழந்தைகள் ஆட்டிசம் எனும் நரம்பியல் வளர்ச்சிக் கோளாறினால் பாதிக்கப்பட்டுள்ளனர். தமிழ் அகராதியில் 'ஆட்டிசம்' என்பதற்கு 'மூளை இறுக்கம்' என அர்த்தம் வழுங்கப்படுகிறது. இதனைப் புரிந்துகொள்ளும் வகையில் கூறுவதாயின் 'ஆட்டிசம்' என்பது வழமைக்கு மாறான மூளை விருத்தியைக் குறிக்கின்றது. அதாவது மூளையின் நரம்புத் தொகுதியின் போதிய வளர்ச்சி இன்மையின் காரணமாக உணர்வுகளும் உணர்ச்சிகளும் சாதாரண மக்களிலும் பார்க்க வித்தியாசமான முறையில் வெளிக்காட்டும் தன்மைக் காணப்படும்.

குறிப்பாக குழந்தை பிறந்தது முதல் இறக்கும் வரை ஒருவரில் ஆட்டிசம் பாதிப்பு காணப்படும். அதேசமயம் ஒருவரிடமிருந்து மற்றவருக்கு பரவும் தொற்று நோய் கிடையாது. ஆனாலும் உலகளாவிய ரீதியில் இன்று



கவனத்தை ஈர்க்கும் நோய் நிலைமையாக ஆட்டிசம் கருதப்படுகின்றது.

குறிப்பாக, உலகில் பிரான்சில்தான் ஆட்டிசக் குழந்தைப் பிறப்பு வீதம் குறைவாகக் காணப்படுகின்றது. அதாவது, இங்கு பிறக்கும் 144 குழந்தைகளில் ஒரு குழந்தைதான் ஆட்டிசம் பாதிப்புடன் பிறக்கிறது. மாறாக கட்டாரில்தான் ஆட்டிசக் குழந்தைப் பிறப்பு அதிகமாக உள்ளது. இங்கு 66 குழந்தைகளில் ஒரு குழந்தை ஆட்டிசம் பாதிப்புடன் பிறக்கிறது.

அதேசமயம் பொதுவாக அரபு நாடுகளில் 89 குழந்தைகளில் ஒரு குழந்தை ஆட்டிசம் பாதிப்போடு பிறப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன. உலகில் சாரசரியாக 100இல் ஒரு குழந்தை ஆட்டிசம் பாதிப்போடு பிறப்பதுடன், ஆட்டிசம் உள்ள பெண் பிள்ளைகளை விட ஆண் பிள்ளைகள் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். அதாவது - 5க்கு 1 என்ற விகித்தில் பாதிக்கப்படுகின்றனர் என உலக சுகாதார ஸ்தாபனம் தனது அறிக்கையில் வெளியிட்டுள்ளது.

இதன் தீவிரத் தன்மையினைக் குறைக்கும் பொருட்டும் விழிப்புணர்வினை மக்களுக்கு ஏற்படுத்தும் பொருட்டும் ஒவ்வோராண்டும் சித்திரை மாதம் 2 ஆம் திகதியில் ஆட்டிசம் (Autism Spectrum Disorders) தினம் அனுட்டிக்கப்படுகின்றது.

எமது நாட்டிலும் ஆட்டிசம் நோய் அச்சுறுத்துவதாகவே காணப்படுகின்றது. இலங்கையைப் பொறுத்தவரையில் 2009 ஆம் ஆண்டிலேயே முதன் முதலில் ஆட்டிசம் கற்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன்படி இலங்கையில் பிறக்கும் நூறு குழந்தைகளில் ஒன்று ஆட்டிசத்திற்கு உள்ளாவது கண்டறியப்பட்டது.

இலங்கையில் வருடாந்தம் பிறக்கும் 3 இலட்சத்து 75 ஆயிரம் சிசுக்களில் 3,750 சிசுக்கள் ஆட்டிசத்தினால் பாதிக்கப்படுவதாக சுகாதார அமைச்சின் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

சுகாதார அமைச்சு நாடளாவிய ரீதியில் மேற்கொண்ட கணக்கெடுப்புகளின்படி 5 வயதுக்குக் குறைந்த சுமார் 18,750 ஆட்டிசம் சிறுவர்கள் இலங்கையில் உள்னர் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

ஆட்டிசம் நோயின் தாக்கம் உலகநாடுகளுக்கு சவால் மிகுந்ததாக காணப்படுகின்றது என்றே கூற வேண்டும்.

ஆட்டிசம் நோயினை ஏற்படுத்தும் காரணிகள் எனும் போது,

-மரபணுக் காரணிகள் - குடும்பத்தில் உடன்பிறந்தவருக்கு ஆட்டிசம் தீவிரமாகக் காணப்பட்டால் அடுத்த குழந்தைக்கு இதன் பாதிப்பு ஏற்படும்.

-சுற்றுச்சூழல் காரணிகள் - கனரக உலோகங்கள் மற்றும் சுற்றுச்சூழலில் உள்ள நச்சுப் பொருட்களை சுவாசிப்பதால் ஏற்படும்.

-கர்ப்ப காலத்தில் ஏற்படும் அதீத இரத்தப்போக்கு

-கர்ப்ப காலத்தில் தலிடோமைட் மற்றும் வோல்ப்ரோயிக் அமிலம் போன்ற மருந்துகளை அதிகளவில் தாய் உட்கொள்ளுதல்

- கர்ப்ப காலத்தில் ஏற்படும் நீரிழிவு நோய்

-மகப்பேறுக்கு முந்தைய மருந்துப் பயன்பாடு

-குழந்தை பிறக்கும்போது தாயின் வயது அதிகமாக இருத்தல்

போன்ற காரணிகளால் ஆட்டிசம் குழந்தைகள் பிறக்கின்றன.

ஆட்டிசம் கொண்ட குழந்தையின் இயல்பான வளர்ச்சியில் ஏற்படும் இடையூறுகள் பொதுவாக மூன்று வயதுக்கு முன்பே உருவாகின்றன. ஆட்டிசம் நோய் கண்டறிதல் இரண்டு நிலைகளைக் கொண்டுள்ளது.

1. 'குழந்தையின் ஆரோக்கியம்' சோதனையின்போது (முதல் நிலை) - குழந்தையின் வளர்ச்சி திரையிடல் செய்யப்படும்.

2. பலதரப்பட்ட குழுவின் மதிப்பீடு (இரண்டாம் நிலை) - மருத்துவர் உடல் பரிசோதனை, மருத்துவ வரலாறு, செவிப்புலன் சோதனைகள் மற்றும் முழுமையான நரம்பியல் பரிசோதனை மூலம் நோயறிதலைச் செய்வதன் மூலம் கண்டறியப்படுகின்றது.

குறிப்பாக ஆட்டிசம் நோயின் அறிகுறிகள் பொதுவாக 24 மாதங்கள் முதல் ஆறு வயது வரை தெளிவாகத் தெரியும். ஆட்டிசத்தின் அறிகுறிகள் லேசானது முதல் கடுமையானது வரை இருக்கக் கூடும். ஆட்டிசம் கொண்ட சில பிள்ளைகள் எந்தவிதப் பின்னடைவும் இல்லாமல் ஆரோக்கியமான செயல்பாட்டு வாழ்க்கையை நிர்வகிக்க முடியும்.

கடுமையாகப் பாதிக்கப்பட்ட ஆட்டிசம் பிள்ளைகள் வாழ்க்கை முழுவதும் செயற்றிறன் அற்றவர்களாக இருப்பர். இதன் முக்கிய அறிகுறிகள் எனும் போது -

-தகவல் தொடர்புகளில் அசாதாரண அல்லது பலவீனமான வளர்ச்சி காணப்படும்

-மொழி மற்றும் அறிவாற்றல் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க தாமதம் காணப்படும்

-பலவீனமான சமூகத் தொடர்பு காணப்படும்

-பிறந்து ஆறு மாதங்கள் அல்லது அதற்குப் பிறகு, மகிழ்ச்சியான வெளிப்பாடுகள் அல்லது புன்னகைகள் எதுவும் காணப்படாது

-பிறந்து ஒன்பது மாதத்தில் முகபாவனைகள், புன்னகைகள் மற்றும் ஒலிகள் உணரப்படாமல் இருக்கும்

- பிறந்து 12 மாதத்தில் சுட்டிக்காட்டுதல், காட்டுதல், எட்டுதல் அல்லது அசைத்தல் போன்ற சைகைகள் எதுவும் இருக்காது



-குழந்தையின் பெயரைக் கூப்பிடும்போது அல்லது உரத்துக் கத்தும்போது குழந்தை பதிலளிக்காது காணப்படும்

-குழந்தை 16 மாதத்திற்குள் எந்த வார்த்தையையும் பேசாமல் இருத்தல்

-குழந்தை 24 மாதத்திற்குள் ஒரு செயலை மீண்டும் செய்யாமலோ அல்லது பிரதிபலிக்காமலோ இருந்தல்

- கண்ணோடு கண் பார்க்க மாட்டார்கள்

-முகத்தை நேருக்கு நேர் பார்க்காது இருத்தல்

-சில விசயங்களைத் திரும்பத் திரும்ப ஒரே மாதிரி செய்துகொண்டு இருத்தல்

-நாம் சுட்டிகாட்டும் பொருளையோ, திசையையோ பார்க்காது இருத்தல்

-ஆள்காட்டி விரலை உபயோகிக்கத் தெரியாது இருத்தல்

(5ஆம் பக்கம் பார்க்க...)

# ஆட்டிசம் குழந்தைகளும்...





(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

அதாவது, ஆட்டிசம் பிள்ளைகளின் தகவல் தொடர்பு, சமூக ஊடாடல், அறிவாற்றல் மற்றும் நடத்தையை ஓட்டுமொத்தமாகப் பாதிப்பதாகக் காணப்படுகின்றது. ஆயினும், ஆட்டிசம் நோய் உயிராபத்தை ஏற்படுத்தாது.

அதற்கென விசேடமாக மருந்துகள் உட்கொள்ள அவசியமில்லை என்றும் வைத்திய நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். இருப்பினும் ஆட்டிசம் குழந்தைகள் ஏனைய குழந்தைகளைப் போன்றே சாதாரண உடல் வளர்ச்சியைக் கொண்டிருப்பர். ஆனால், மந்தநிலையில் செயற்படுபவர்களாக ஆட்டிசத்தால் பாதிக்கப்பட்ட பிள்ளைகள் காணப்படுவார்கள். மேற்கூறிய அறிகுறிகள் இருந்தால் மருத்துவரை அணுகி ஆலோசனை பெற வேண்டும்.

இன்றைய காலத்தில் ஆட்டிசத்துக்கான சிகிச்சைகள் அல்லது தலையீடுகள் அனைத்தும் ஆட்டிசத்தால் பாதிக்கப்பட்ட ஒரு குழந்தையின் வளர்ச்சி சார்ந்த பிரச்சினைகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு காணப்படுகின்றன.

மருத்துவ சிகிச்சையோடு இணைந்த வகையில் உளவியல் சிகிச்சைகளும் வழங்கப்படுவதால் ஆட்டிசத்தால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளிடையே உடலியல் மற்றும் உளவியல் ரீதியான முன்னேற்றம் அடைந்து வருவதாக ஆய்வுகள் கூறுகின்றன.

குறிப்பாக, அமெரிக்காவில் 36 சதவீதமான ஆட்டிசம் குழந்தைகள் சாதாரண மாணவர்களுடன் கல்வி கற்பதுடன் 19 சதவீதமானவர்கள் எவரது உதவியுமின்றி தனியாக வாழ்கிறார்கள். அத்தோடு, 58 சதவீதமானவர்கள் தொழில் செய்கிறார்கள் என அமெரிக்க ஆய்வுகள் சுட்டிக்காட்டியுள்ளன. இதற்கு ஆட்டிசத்தால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு தொடர்ச்சியாக வழங்கப்படும் சிகிச்சை முறைகள் காரணமாக அமைகின்றன என்றே கூற வேண்டும்.

ஆட்டிசத்தால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு வழங்கப்படும் உளவியல் சிகிச்சை முறைகள் எனும் போது-

-தொழில் வழிக்காட்டல் சிகிச்சை (Occupational Therapy) - சிகிச்சை முறையானது ஆட்டிசத்தால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு சுய பாதுகாப்பு, தன்னைத்தானே விருத்தி செய்து கொள்ளக் கூடிய செயல்களை குறித்த பயிற்சியை அளிக்கின்றது.

உதாரணமாக உணவு உண்ணுதல், உடை மாற்றுதல் போன்ற குறிப்பிட்ட செயல்களை உதவி இல்லாமல் தானே செய்வதற்குப் பயிற்சி வழங்குவதை அடிப்படையாகக் கொண்ட சிகிச்சையாகக் காணப்படுகின்றது.

இந்த சிகிச்சையில் பிள்ளைக்கு குறித்த ஒரு வாழ்வாதாரப் பயிற்சி வழங்குவது என்பது பிரதானமாக காணப்படுகின்றது.

-பேச்சு சிகிச்சை (Speech therapy) - குறித்த ஆட்டிசத்தால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு இச்சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. அதாவது, இப்பிள்ளைகள் அதிகமாகப் பேசுவது அல்லது தெளிவாகப் பேசுவது, தொடர்புபடுத்திப் பேசுவது கிடையாது.

ஆனால், இந்த சிகிச்சையானது ஆட்டிசத்தால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு அதிகமாக உரையாடுதல், பேசும்போது தெளிவாகப் பேசுவதற்குப் பயிற்சிகளை அளித்தல், தொடர்புபடுத்திப் பேசுவதற்கான பயிற்சிகளை அளித்தல் என்பவற்றினை அடிப்படையாகக் கொண்டது. இந்த சிகிச்சை முறையானது மன வளர்ச்சி குறைந்த பிள்ளைகள் மத்தியில் ஊக்குவிக்கப்படுகின்றது.

-உணவு முறைச் சிகிச்சை (Orthomolecular therapy) - இச்சிகிச்சை முறையானது ஆட்டிசத்தால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு சில குறிப்பிட்ட உணவுகளை வழங்க வழிகாட்டுகிறது. அத்தகைய உணவுகளை ஆரோக்கியமான முறையில் வழங்குவது மட்டுமல்லாது ஊட்டச்சத்தான உணவைக் கண்டறிந்து குறித்த பிள்ளைக்கு வழங்கும் அறிவினை ஏற்படுத்துவதோடு, ஓர் அட்டவணையை அடிப்படையாகக் கொண்ட சிகிச்சை முறையாகவும் கருதப்படுகின்றது

-உடலியல் சிகிச்சை (Physical therapy) - ஆட்டிசத்தால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளின் உடல் வளர்ச்சி என்பது மந்தமான நிலையில் காணப்படும். அதுமட்டுமல்லாது இவர்களிடம் உடல் இயக்கத் தன்மை மற்றும் சுறுசுறுப்பும் குறைவாகக் காணப்படுவதால், அதிகளவில் நோய்க்கு உள்ளாகும் தன்மை காணப்படுகின்றது. இந்நிலைமையைக் குறைப்பதற்காக சிகிச்சையின் உதவியைக் கொண்டு உடல் இயக்கங்களை முறையாக வெளிப்படுத்துவதற்கான உடற்பயிற்சிகள், தியானம் செய்தல் என்பன வழங்கப்பட்டு வருகின்றன.

-அறிகை நடத்தைச் சிகிச்சை (Cognitive Behavioral Therapy) - இந்த சிகிச்சையானது ஆட்டிசத்தால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளிடம் அதிகம் பயன்படுத்தப்படுகின்றது. அதாவது, இப்பிள்ளைகளிடம் மனசோர்வு (PTSD, OCD)- தூக்கக் கோளாறு போன்ற நோய்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு. அதனை சமாளிக்கும் உத்திகளை தெளிவுப்படுத்துகின்றது.

அத்துடன், சிந்தனைகளை மாற்றியமைத்துத் தகவல் தொடர்புகளை மேம்படுத்தவும், உடல் நோய்களைச் சமாளிக்கவும், நாள்பட்ட உடல் அறிகுறிகளை நிர்வகிக்கவும், உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தவும் இச்சிகிச்சை முறை பயன்படுத்தப்படுகின்றது

இத்தகைய உளவியல் சிகிச்சைகளை நோக்கும்போது ஆசிரியர்கள், பெற்றோர்கள், மருத்துவர்கள் சிகிச்சை முறையை கையாளும் நுட்பத்தை தெரிந்து இருக்கவேண்டியது அவசியமாகும்.

குறிப்பாக, ஆட்டிசம் பிள்ளைகளை வழிநடத்தும் பெற்றோர் மற்றும் ஆசிரியர்கள் தொழில் வழிகாட்டல் சிகிச்சை, பேச்சுச் சிகிச்சை போன்றவற்றை முறையாகக் கையாளுவதுடன், மருத்துவர்கள் உணவு முறைச் சிகிச்சை குறித்துத் தெளிவான அறிவைப் பெற்றோருக்கு வழங்கவேண்டும். அத்துடன், அறிகை நடத்தைச் சிகிச்சையை முறையாக வழங்குபவராக இருக்கும்போது ஆட்டிசம் குறைபாட்டை இலகுவில் நிவர்த்தி செய்து கொள்ள முடியும். மேலும், இத்தகைய சிகிச்சை முறைகள் உள்ளன என்பதை பெற்றோருக்கு மிகத் தெளிவாக விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன் சிகிச்சை முறைகளைக் கொண்டு பிள்ளைகளைக் குணப்படுத்த முடியும் என்ற நம்பிக்கையையும் ஏற்படுத்த வேண்டும்.

மேலும் ஆட்டிசம் பிள்ளைகளுக்கு உளக் கல்வி (Psycho Education) வழங்குவது என்பதும் முக்கியமாகும். இந்தக் கல்விமுறையானது விசேட தேவை உடையோர் கல்வி கற்கும் பாடசாலைகளில் அல்லது விசேட மருத்துவமனைகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அந்தவகையில் இந்நிறுவனங்களில் பிள்ளைகளின் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தும் வகையிலான செயற்பாடுகள், திட்டங்கள் மற்றும் பெற்றோருக்கான ஆலோசனைகள் என்பன முறையாக வழங்கப்பட்டு வருகின்றமையை பெற்றோருக்கு சான்றுப்படுத்துதல் அவசியமாகும்.

ஆட்டிசம் பிள்ளைகளிடையே சிறப்புக் கலைத்திட்டம் ஒன்றினைப் பயன்படுத்த வேண்டும். இதில் எழுத்து மற்றும் செயல்முறைப் பயிற்சிகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதோடு, அவர்களுடைய அன்றாட வாழ்க்கைச் செயல்களை செய்யவும் பழக்கப்படுத்த வேண்டும். இதன் மூலம் ஆட்டிசம் பிள்ளைகள் தன்னைத்தானே விருத்தி செய்து கொள்வதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

பெற்றோருக்கான ஆலோசனை (Counseling For Parent) என்பது மிக முக்கியமான ஒன்றாகக் கருதப்படுகின்றது. இதன்போது பிள்ளைகளுடன் எவ்வாறு அணுகலாம், என்னென்ன வகையில் உதவியாக இருக்க முடியும் போன்ற பல்வேறு விதமான அறிகுறிகளை வழங்குவதன் மூலம் ஆட்டிசம் குழந்தைகளின் நடத்தை குறித்த அறிவு பெற்றோருக்கு ஏற்படும். இதனால் குறித்த பிள்ளையின் நடத்தைகளைச் சீரமைக்க பெற்றோருக்கு அது உதவியாக இருக்கும். மேலும் பிள்ளையின் வீட்டுச் சூழலைப் பொறுத்தவரையில் பெற்றோர் மற்றும் சகோதரர்களின் ஒத்துழைப்பை பிள்ளைக்கு முழுமையாக வழங்க வேண்டும்.

இத்தகைய உளவியல் சிகிச்சை முறைகளைத் தொடர்ச்சியாக வழங்கும்போது ஆட்டிசத்தின் பாதிப்பைக் குறைத்துக்கொள்ள முடிவதுடன், பிள்ளைகளின் ஆளுமை வளர்ச்சியினை விருத்தி செய்து கொள்ளக்கூடியதாகவும் இருக்கும்.

மேலும், உளச்சிகிச்சைகள் மருத்துவ சிகிச்சையுடன் இணைந்து தற்காலத்தில் முன்னெடுக்கப்படுவதால் அதிக வினைத்திறனுடன் காணப்படுவதுடன் பிள்ளையின் உள வளர்ச்சியிலும் முன்னேற்றம் ஏற்படுகின்றது என்றே கூறவேண்டும்.



# கிழக்கில் இயங்கிய போலி மருத்துவ நிலையங்கள் சுற்றிவளைப்பில் போலி வைத்தியரும் அகப்பட்டார்!



(நூருல் /ஹுதா உமர்)

பொதுமக்களின் சுகாதாரத்திற்கு அச்சுறுத்தலாக அமையும் இடங்கள் மீதான தொடர் சுற்றிவளைப்பின் மற்றுமொரு அங்கமாக சட்டவிரோத மருத்துவ நிலையங்கள் இன்று சாய்ந்தமருது, பாண்டிருப்பு, மருதமுனை பிரதேசங்களில் அடையாளம் காணப்பட்டு அந்த நிலையங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கம், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை, சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயங்களுக்கு தொடர்ந்தும் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளை அடுத்து கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஷகீலா இஸ்ஸதீனின் ஆலோசனை வழிகாட்டலில் இந்த திடீர் சுற்றிவளைப்பு நடவடிக்கை இடம்பெற்றது.

இந்த சுற்றிவளைப்பின்போது எவ்வித அரச அங்கீகாரமுமின்றி இயங்கிவந்த மருத்துவ நிலையம், அழகுக்கலை நிலையம், பயற்சி நிலையங்களை நடத்தி வந்த நபர் இணங்காணப்பட்டதுடன், அவரிடமிருந்த மனித பாவனைக்கு பொருத்தமற்ற மற்றும் ஆபத்தான மருந்துகளும் கைப்பற்றப்பட்டன.

அதுமட்டுமின்றி முறையான கல்வித்தகமையோ, தொழில்தகைமையோ இல்லாத குறித்த நபர் மருத்துவ பரிந்துரைகள் மற்றும் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் அனுமதியில்லாத மருந்துகளை வழங்கி வந்தமையும் இதன்போது கண்டறியப்பட்டதுடன் அவர் மருத்துவராக தன்னை அடையாளப்படுத்திய சான்றுப் பொருட்களும் கைப்பற்றப்பட்டன.

கல்முனை மாநகர பிரதேசத்தில் மூன்று கிளைகளைக் கொண்டு இயங்கிய இந்த நிலையம் மனித உயிர்களுக்கும் சுகாதார நிலைக்கும் சவால் விடும் வகையில் இயங்கி வந்தமையை கண்டறிந்து இவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கத் தேவையான செயற்பாடுகளை சுதாரத்துறையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த திடீர் சுற்றிவளைப்பில் கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் ஏ.ஆர்.எம். அஸ்மி, கல்முனை பிராந்திய சுற்றாடல் உணவு பாதுகாப்பு பொறுப்பு வைத்தியதிகாரி டொக்டர் ஏ.எஸ்.எம். பௌஸாத், கல்முனை மாநகர பிரதம சுகாதார வைத்திய அதிகாரியும், சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரியுமான டொக்டர் எம்.ஜெ.கே.எம். அர்சத் காரியப்பர், உணவு மற்றும் மருந்துகள் பரிசோதகர் எஸ்.ஜீவராசா, மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர்களான ஏ.எம்.பாறுக், ஏ.எல்.எம். ஜெரின், பொதுச்சுகாதார பரிசோதகர்களான ஜே.எம். நஜிமுதீன், ஐ.எல். எம்.இத்ரீஸ் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# முஸ்லிம் பாடசாலைகளின் முதலாம் தவணையின் இரண்டாம் கட்டம் நாளை ஆரம்பமாகவுள்ளது!

முஸ்லிம் பாடசாலைகளின் முதலாம் தவணையின் இரண்டாம் கட்ட கல்வி நடவடிக்கைகள் நாளை ஆரம்பமாகவுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

2024 ஆம் கல்வி ஆண்டுக்கான அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளின் முதலாம் தவணையின் முதற்கட்ட கல்வி நடவடிக்கைகள் நிறைவடைந்த நிலையில் கடந்த 10ஆம் திகதி விடுமுறை வழங்கப்பட்டது.

இதையடுத்து, பாடசாலைகளின் முதலாம் தவணையின் இரண்டாம் கட்ட கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் 24ஆம் திகதி ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டது. இது அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளில் உள்ள சிங்கள மற்றும் தமிழ் பாடசாலைகளுக்கு பொருந்தும் எனவும் கல்வி அமைச்சு தெரிவித்திருந்தது.

இருப்பினும், முஸ்லிம் பாடசாலைகளின் முதலாம் தவணையின் இரண்டாம் கட்ட கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் 17ஆம் திகதி ஆரம்பமாகும் என கல்வி அமைச்சு குறிப்பிட்டிருந்தது. அதன்படி, முஸ்லிம் பாடசாலைகளின் முதலாம் தவணையின் இரண்டாம் கட்ட கல்வி நடவடிக்கைகள் நாளை ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (04)

# சுவிஸ் பெண்ணை ஏமாற்றிய யாழ் பொலிஸ் உத்தியோகத்தர்?

சுவிஸில் வசிக்கும் யாழ்ப்பாணத்தைப் பூர்வீகமாகக் கொண்ட பெண்ணை திருமணம் செய்வதாகக் கூறி சுமார் 50 இலட்ச ரூபாவை மோசடி செய்ததாக பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவர் மீது முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தனது கணவரைப் பிரிந்து பிள்ளைகளுடன் வாழ்ந்து வந்த பெண்ணொருவரே இவ்வாறு மோசடி செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிய வந்துள்ளது.


குறித்த பெண் கடந்த சில வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் வந்திருந்தபோது, தனது பூர்வீகச் சொத்துக்கள் குறித்து ஏற்பட்ட முரண்பாடுகள் தொடர்பில் முறைப்பாடு அளிப்பதற்காக பொலிஸ் நிலையத்திற்கு சென்றுள்ளார் எனவும், இதன்போது அங்கிருந்த தமிழ்ப் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருடன் அவருக்கு பழக்கம் ஏற்பட்டுள்ளதாகவும், அது நாளடைவில் காதலாக மாறியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து குறித்த பெண் பொலிஸ் உத்தியோகஸ்தருக்கு பணம், நகை என்பவற்றுடன் அன்பளிப்புப் பொருட்கள் பலவற்றையும் வழங்கி வந்துள்ளார் எனவும், நாளடைவில் பொலிஸ் உத்தியோகஸ்தர் அப்பெண்ணை ஏமாற்றத் தொடங்கியுள்ளார் எனவும் முறைப்பாடளிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இது குறித்த மேலதிக விசாரணைகள் தற்போது இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (04)





## பட்டிருப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் பதவியேற்பு!

(வி.ரி.சகாதேவராஜா)

கிழக்கு மாகாண மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளரான செல்லத்துரை புவனேந்திரன் பட்டிருப்பு வலயக்கல்விப் பணிப்பாளராக (மேலதிக) இன்று கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

ஏலவே பட்டிருப்பு வலயக்கல்விப் பணிப்பாளராகவிருந்த ரி.சிறிதரனுக்கு எதிராக அண்மைக் காலமாக அங்கு தொடர் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வந்ததைத் தொடர்ந்து அவர் திருகோணமலையில் உள்ள கிழக்கு மாகாண கல்வி அமைச்சில் இணைக்கப்பட்டுள்ளார்.

கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளராக இருந்த செல்லத்துரை புவனேந்திரன் கிழக்கு மாகாண மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டு கடமையாற்றி கொண்டு வந்தவேளை அக்கடமைக்கு மேலதிகமாக பட்டிருப்பு வலயக்கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். அவர் இன்று தனது கடமையை பொறுப்பேற்றார்.

இலங்கை கல்வி நிருவாக சேவை தரம் 1 அதிகாரியான புவனேந்திரனுக்கான நியமனக்கடிதம் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரால் வழங்கப்பட்டது.

காரைதீவைச்சேர்ந்த இவர்2009 இல் காரைதீவு விபுலாநந்த மத்திய கல்லூரியில் ஆசிரிய நியமனம் பெற்றதுடன் கல்விச்சேவையில் இணைந்துகொண்டார். அரச சேவை ஆணைக்குழுவின் தீர்மானத்தின்படி இலங்கை கல்வி நிருவாக சேவையின் முதலாம் வகுப்புக்கு 2021 முதல் பதவி உயர்வு பெற்றுள்ளார்.

இவர் 2009 இல் இலங்கை கல்வி நிருவாக சேவையில் இணைந்து கல்முனை கல்வி வலயத்தில் கடமையாற்றிய பின்னர், 2010 முதல் 2018 வரை சம்மாந்துறை கல்வி வலயத்தில் கல்வி அபிவிருத்தி, திட்டமிடல், நிர்வாகம் போன்ற பிரிவுகளில் பிரதிக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றி, 2019 இல் மீண்டும் கல்முனை வலயத்திற்கு இடமாற்றம் பெற்றுச்சென்று, 2020 முதல் கல்முனை கல்வி வலயத்தின் வலயக்கல்விப் பணிப்பாளராக கடமையாற்றி வந்திருந்தார்.

## டெனிஸ் விளையாட்டு வளாகம் திறந்து வைப்பு

(அஸ்ஹர் இப்ராஹிம்)

அம்பாறை மாவட்ட டென்னிஸ் விளையாட்டு வளாகம் அம்பாறையில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனினால் திறந்து வைக்கப்பட்டது.

டீஐஜி தமயந்த விஜயஸ்ரீ மற்றும் மேஜர் ஜெனரல் விபுல சந்திரசிறி ஆகியோரின்தலைமையில்இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்ரம, திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டபிள்யூ.டீ.வீரசிங்க ஆகியோர் கலந்து கொண்டனர்.

இலங்கை டென்னிஸ் சங்கத்தின் தலைவர் இக்பால் பின் இசாக்கின் வழிகாட்டலின் கீழ்இந்த டெனிஸ் மைதான வளாகம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.04.2024இல் வெளியிடப்பெற்றது.